**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 84** **நாள்: 13.07.2017**

# கல்விச் சுற்றுலாவாக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

கல்விச் சுற்றுலாவாக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர் அவர்களை இன்று (13.07.2017) தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்களின் தனித்திறனை வெளிக்கொணர்வதற்காக பல்வேறு போட்டிகள் நடத்தி அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2016–2017 கல்வியாண்டு முதல் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்கள் கல்விச்சுற்றுலாவாக தனியார் நிறுவனங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு அழைத்து செல்லப்பட்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் கடந்த கல்வியாண்டில் ஏழு மாணவர்கள் மலேசியாவுக்கு அழைத்து செல்லப்பட்டனர். தற்போது ஏழு மாணவர்கள் ஜெர்மனிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

சென்னை ரோட்டரி சங்கத்தின் "Wings to Fly", கோத்தே பயிற்சி நிறுவனம் மற்றும் சென்னை மேக்ஸ் முல்லர் பவன் ஆகிய நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து சென்னை உயர்நிலைப்பள்ளி (ம) மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு நம் நதிகளை அரவணைப்போம் என்ற தலைப்பில் கதையாக சொல்லும் பேச்சுப் போட்டியினை நடத்தியது.

பேச்சுப் போட்டியின் இறுதிச்சுற்றில் தேர்வுசெய்யப்பட்டுள்ள 7 மாணவ / மாணவியர்கள் உதவி கல்வி அலுவலர், "Wings to fly" நிறுவனத்தின் பொறுப்பாளர் மற்றுட் ரோட்டரி சங்க உறுப்பினர் ஆகியோர் துணையுடன் கடந்த 03-07-2017 முதல் 10-07-2017 வரை ரோட்டரி கிளப் மூலமாக கல்வி சுற்றுலாவாக ஜெர்மனிக்கு அழைத்து செல்லப்பட்டனர். கல்விச் சுற்றுப்பயணத்தின்போது, ஜெர்மனி நாட்டின் ஹேம்பர்க் மற்றும் பெர்லின் நகரங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் உள்ள இடங்கள், நீர்நிலை, நினைவகங்கள், அருங்காட்சியகங்கள்,

எல்ஃபா நதிநீரை தூய்மைப்படுத்தும் முறை, கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு ஜெர்மனியை பிரிக்கும் பெர்லின் சுவரினையும் பார்வையிட்டு, அதனைப் பற்றி அறிந்து கொண்டனர்.

கல்விச்சுற்றுலா சென்ற மாணவ, மாணவியர்கள் இப்பயணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி கொண்டு, இந்த அனுபவத்தின் மூலம் பிற நாடுகளின் நீர் நிலைகள், நினைவங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவமான இடங்களில் கடைபிடிக்கப்படும் ஒழுங்குமுறையை குறித்து அறிந்து கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் தங்களது திறனை வளர்த்து கொண்டு எதிர்கால வாழ்வினை சிறப்பான முறையில் ஏற்படுத்திக்கொள்ள மாணவ, மாணவியர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவ/மாணவியர்கள் தங்களது எதிர்கால வாழ்வினை வளமாக்கி கொள்ள வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் உடனிருந்தார்.

**கல்விச்சுற்றுலா சென்ற மாணவ / மாணவியர்களின் பெயர் விவரம் பின்வருமாறு**

| வ. எண். | மாணவ, மாணவியர்களின் பெயர் | வகுப்பு | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பார்த்திபன் மலைராஜ் | 10 | சென்னை உயர்நிலைப்பள்ளி, கூக்ஸ் சாலை |
| 2. | நிசாந்தி கோதண்டராமன் | 9 | சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்பராயன் |
| 3. | இலக்கியா குமரன் | 9 | சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்பராயன் |
| 4. | புஷ்பராஜ் அபிமன்னன் | 8 | சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க் |
| 5. | ஹரிப்ரியா சோலைக்குமார் | 10 | சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க் |
| 6. | பிரியங்கா வெற்றிவேல் | 9 | சென்னை மேல்நிலைப்பள்ளி, புலியூர் |
| 7. | சிவகாமி சமஸ் | 9 | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை |

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர் திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப, அவர்கள், கல்வி அலுவலர் திருமதி.டி.ரஞ்சனி, ரோட்டரி கிளப் (சென்னை கிழக்கு) தலைவர் திரு.பி.எஸ்.புருசோத்தம், உதவி கல்வி அலுவலர் உட்பட மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**